**கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜூலை 22 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டெம்பர் 04 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருந்த 12 செயற்திட்டங்களுக்காக 2019 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய ரூபா 14,549,372 இற்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சகல கடன் கொடுத்தோருக்காக நிதிக் கூற்றுக்களில் நிதிஏற்பாடு மேற்கொள்ளல் வேண்டும். | 2019.12.31 இல் செலுத்த வேண்டியதாக இருந்த ரூபா 14,549,372 பெறுமதியான கடன் மீதிகளாக இறுதிக் கணக்கில் 61 ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுகணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 8,616,247 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 06 நிர்மாணங்கள் மூலதன மாக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு உள்ளடக்குவேன் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வர்த்தக கட்டிட நவீனமயப்படுத்தலுக்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாழ்டின் திசெம்பர் இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 4,199,054 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சகல பொறுப்புக்ளும் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு உள்ளடக்குவேன் |

**(ஆ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 இல் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை அறவிடப்படாது காணப்படும் ரூபா. 567,022 ஆன நிலுவை குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் ஆண்டில் குறித்த நிலுவை குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 92,248,685 பெறுமதியான காணி கட்டிடங்களுக்கு உரிய ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக் கும் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிக்காக உரித்து கையேற்றலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1951 இலக்கம் 14 உடைய மோட்டார் வாகனச் சட்டம் 203 ஆம் அதிகாரம | சபைக்குரிய 02 கை உழவு இயந்திரம் மற்றும் டேலர் 04 டயர் ட்ரக்டர் வண்டியும் டேலரும் வண்டியும் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கை உழவு இயந்திரம் மற்றும் டேலரை பதிவு செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | 2006 நவம்பர் 14 ஆந் திகதிய PL/07/01/53 ஆம் இலக்க உள்ளூராட்சி மீளமைப்பு சுற்றறிக்கையின் 09 ஆம் இலக்கம் | மயானங்கள் ஆவணங்கள் பராமரித்தல், வெளியிடல், மதில்கள், வேலிகள் இட்டு பராமரிக்க நடவடிக்கை எடுத்தல் | ஆவணங்களை பராமரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் பிரதேசத்தில் காணப்படும் மயானங்களை சபைக்கு பொறுப்பேற்று தருமாறு பிரதேச செயலாளருக்கு வேண்டுகேளுக் விடுக்கப்பட்டுள்ளது. அவ்விடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,645,382 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,355,178 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிட ப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிட ப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,792,112 | 1,851,169 | 1,606,483 | 1,626,044 | 1,722,112 | 1,856,994 | 1,442,851 | 1,381,358 |
| (ii) | வாடகை | 8,475,463 | 9,682,150 | 9,493,608 | 1,452,929 | 8,696,221 | 7,011,975 | 7,240,204 | 1,264,387 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 4,322,500 | 3,764,488 | 4,041,269 | - | 3,802,500 | 2,816,330 | 2,816,330 | 276,781 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,323,936 | 7,914,915 | 7,813,647 | 4, 124,684 | 9,230,500 | 5,092,868 | 3,092,852 | 4,023,416 |
| | மொத்தம் | 22,914,011 | 23,212,722 | 22,955,007 | 7,203,657 | 23,451,333 | 16,778,167 | 14,592,237 | 6,945,942 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆவது பிரிவின் பிரகாரம் மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்காமலே வீதவரிகளை அறவிடுதல் நடைபெற்றிருந்ததுடன் இதன் காரணமாக நிலுவையிலிருக்கும் ரூபா. 1,626,094 வீதவரியை அறவிட இயலாது இருந்தது. | மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் வர்த்தமானியில் வெளியிட்டு விதிகளின் பிரகாரம் நிலவையை அறவிட நடவடிக்கை எடக்கப்பட வெண்டும். | முன்வைக்கப்பட்ட நிலுவையில் 2019 ஆம் ஆண்டில் விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கையில் ரூபா. 292,611 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மேலும் நிலவும் நிலுவையை இவ் ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கஹட்டகஸ்திகிலிய நகரில் சபைக்கு சொந்தமான 13 கடைகளின் குத்தகையாளர்களின் கழிவு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கழிவு வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 அனுமதிப்பத்திர கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 59 – 66 விதிகளின் பிரகாரம் முறையான பரிசோதனை யொன்றை செய்து வியாபார இடங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. | விதிகளின் பிரகாரம் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 745,669 ஆகவும், முத்திரைக் கட்டணம் 1,789,337 ஆகவும் காணப்பட்டது. | குறித்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இத்தொகையை 2020 ஆம் ஆண்டின் போது அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்று | உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை | கௌரவ அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க நிறைவேற்றப்பட்ட |

| | | |
|---|---|---|
| வதற்கான உப பிறப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 திசெமபர் 31 வரை குறித்த விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | உப விதி மற்றும் 2016.03.30 ஆம் திகதிய 1960/35 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்ட வட மத்திய மாகாணத்தின் பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 10 உப விதிகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன. |

**(ஆ) கைவிடப்பட்ட பணிகள்**

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விஷேட தேவைகள் உள்ள கிராமங்கள் அபிவிருத்தி 2019 இன் கீழ் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 500,000 ஆன ரத்மல்கஹ வெவ பாதையில் அச்சுக்கல் பதிக்கும் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வெண்டும். | ஏற்றுக் கொள்கிறேன்.<br>(i) குறித்த அமைப்பின் கறுப்புப் பட்டியலிடப்பட்ட ஆவணங்களை பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.<br>(ii) இவ் வீதியின் ஒரு பகுதியை மாகாண வீதி அபிவிருத்தி சபையினால் செய்யப்பட இருந்த காரணத்தால் எங்களால் ஒப்பந்தமிடப்பட்ட திட்டத்தை செயற்படுத்த இயலாது இருந்தது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி 2030 நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 செயற்படுத்தப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறைச்சிக் கடை, மீன் விற்பனை கூடம் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடங்கள் குத்தகை விடுவதன் மூலம் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 1,452,928 அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். நிலுவைத் தொகையை இவ் ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 5,593,818 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத நீர் பவுசர் டிரேலரொன்று பாவனைக்கு எடுக்கப்படாது சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | குறித்த வாகனங்களில் திருத்தங்கள் செய்து ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். | சபையின் அன்றாட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களில் திருத்தங்கள் செய்து ஓட்டப்படுகின்றன. இவ் ஆண்டில் சபை நிதியத்தை பயன்படுத்தி ஒரு சில வாகனங்களையாவது திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | தற்போது ஓட்டப்படும் 05 வாகனங்களுக்காக காப்புறுதி பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | காப்புறுதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். காப்புறுதியை இவ் ஆண்டு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |